# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1829/23 - 2013 සැප්තැම්බර් මස 23 වැනි සඳුදා - 2013.09.23

*1829/23 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 23 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம்**

3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை

திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவினால் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, முதலீட்டு ஊக்குவிப்புக்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில், முதலீட்டு ஊக்குவிப்புக்கள் அமைச்சர் லக்ஷ்மன் யாபா அபேவர்த்தன ஆகிய நான், இந்த அறிவிப்பின் மூலம் பின்வருமாறு பிரகடனப்படுத்துகிறேன் :-

(1) உயர்தரத்திலான ஹோட்டல் ஒன்று, மாநாட்டு மத்தி, பொழுதுபோக்கு மற்றும் சூதாட்டக் களரி, சர்வதேச தரத்திலான சாப்புத் தொகுதி, சொகுசு மாடி வீடுகள், சேவை வழங்கல்களுடன் கூடிய மாடி வீடுகள் அத்துடன் அலுவலக இடவசதி (“ஒன்றிணைந்த விடுமுறை விடுதி”) ஆகியவற்றின் அபிவிருத்தி, நிர்மாணம், ஏற்பாடுகள், செயற்படுத்தல், உரிமை கொள்ளல், முகாமை, செயற்படுத்தல், விற்பனை செய்தல், குத்தகைக்கு விடுதல் மற்றும் வாடகைக்கு விடுதல் போன்றவற்றுக்கான பல்திறன் வர்த்தகங்களைக் கொண்ட “ஜகனிக்” உருவிலான சுகபோக மற்றும் கலப்பு அமைப்பைக் கொண்ட மேற்படி சட்டத்தின் தேவைக்காக செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டம் ஒன்றென இனங்காணப்பட்ட ஒன்றிணைந்த விடுமுறை விடுதி ஒன்றை இரு கட்டங்களில் மேல் மாகாணம், கொழும்பு 2, க்லனி வீதி மற்றும் ஜஸ்டிஸ் அக்பர் மாவத்தையில் அமைப்பதற்கான கருத்திட்டம் பற்றிய சம்பந்தப்பட்ட தகவலைக் கொண்ட அறிவித்தல் 2013, யூலை 18 ஆந் திகதிய 1819/30 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது.

(2) இரு கட்டங்களில் மேல் மாகாணம், கொழும்பு 2, க்லனி வீதி மற்றும் ஜஸ்டிஸ் அக்பர் மாவத்தையில் உயர்தரத்திலான ஹோட்டல் ஒன்று மாநாட்டு மத்தி, பொழுதுபோக்கு மற்றும் சூதாட்டக் களரி, சர்வதேச தரத்திலான சாப்புத் தொகுதி, சொகுசு மாடி வீடுகள், சேவை வழங்கல்களுடன் கூடிய மாடி வீடுகள் அத்துடன் அலுவலக இடவசதி (“ஒன்றிணைந்த விடுமுறை விடுதி”) ஆகியவற்றின் அபிவிருத்தி, நிர்மாணம், ஏற்பாடுகள், செயற்படுத்தல், உரிமை கொள்ளல், முகாமை, செயற்படுத்தல், விற்பனை செய்தல், குத்தகைக்கு விடுதல் மற்றும் வாடகைக்கு விடுதல் போன்றவற்றுக்கான பல்திறன் வர்த்தகங்களைக் கொண்ட “ஜகனிக்” உருவிலான சுகபோக மற்றும் கலப்பு அமைப்பைக் கொண்ட கருத்திட்டம் ஒன்றை செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டம் ஒன்றென பிரகடனப்படுத்துவதற்காக 3 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் பிரகாரம் அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

(3) "இரு கட்டங்களில் மேல் மாகாணம், கொழும்பு 2 க்லனி வீதி மற்றும் ஜஸ்டின் அக்பர் மாவத்தையில் உயர்தரத்திலான ஹோட்டல் ஒன்று, மாநாட்டு மத்தி, பொழுதுபோக்கு மற்றும் சூதாட்டக் களரி, சர்வதேச தரத்திலான சாப்புத் தொகுதி, சொகுசு மாடி வீடுகள், சேவை வழங்கல்களுடன் கூடிய மாடி வீடுகள் அத்துடன் அலுவலக இடவசதி ("ஒன்றினைந்த விடுமுறை விடுதி") ஆகியவற்றின் அபிவிருத்தி, நிர்மாணம், ஏற்பாடுகள், செயற்படுத்தல், உரிமை கொள்ளல், முகாமை, செயற்படுத்தல், விற்பனை செய்தல், குத்தகையக்கு விடுதல் மற்றும் வாடகைக்கு விடுதல் போன்றவற்றுக்கான பல்திறன் வர்த்தகங்களைக் கொண்ட "ஐகனிக்" உருவிலான சுகபோக மற்றும் கலப்பு அமைப்பைக் கொண்ட கருத்திட்டம்" என மேற்படி செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டம் என அழைக்கப்பட்டுப் பிரசித்தப்படுத்தப்படுவதோடு கருத்திட்டக் கம்பனி வோட்டர்பிரன்ட் ப்ரபர்டிஸ் (பிறைவேட்) லிமிட்டெட் என்றழைக்கப்படும்.

(4) மேற்படி கருத்திட்டம் ஒன்றிணைந்த விடுமுறை விடுதியின் 1 ஆம் கட்டத்திலான அதன் வர்த்தக நடவடிக்கைகளை இலங்கை முதலீட்டுச் சபையுடன் 2013, யூலை 11 ஆந் திகதி செய்து கொண்ட கருத்திட்ட ஒப்பந்தத்தில் குறிக்கப்பட்ட திகதியில் இருந்து அறுபது (60) மாதங்களுக்குள் ஆரம்பிக்க வேண்டும் என்பதோடு, ஒன்றிணைந்த விடுமுறை விடுதியின் 2 ஆம் கட்டத்தை நடைமுறைப்படுத்துவதாயின், சொல்லப்பட்ட கருத்திட்ட ஒப்பந்தத்தில் குறிக்கப்பட்ட திகதியில் இருந்து மேலும் ஒரு முப்பத்தாறு (36) மாதங்களுக்குள் அதனை மேற்கொள்ள வேண்டும்.

(5) இக்கட்டளையின் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சட்டங்களிலிருந்தான விலக்களிப்புக்கள் கருத்திட்டக் கம்பனியினால் அபிவிருத்தி செய்யப்படும் ஒன்றிணைந்த விடுமுறை விடுதிக்கு ஏற்புடைத்தாகும் என்பதோடு, இவ்வட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள காலவரையறைக்குள் அவை அமுலிலும் இருக்கும்.

**அட்டவணை**

(1) 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம்

(i) கம்பனி வருமான வரி (Corporate Income Tax) -

2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஒருங்கிணைக்கப்பட்ட உல்லாச விடுதியின் சூதாட்டம் அல்லாத செயற்பாடுகளிலிருந்து பிறப்பிக்கப்படும் இலாபம் மற்றும் வருமானம் மீது பத்து (10) வருடங்களுக்கு ஏற்புடைத்தாகாது. ("வரிவிலக்களிப்புக் காலப்பகுதி").

சொல்லப்பட்ட வரிவிலக்களிப்பு காலமானது கருத்திட்ட நிறுவனம் வரி விதிப்பனவுக்கான இலாபத்தை உழைக்க ஆரம்பித்த முதல் வருடம் அல்லது வர்த்தக ரீதியான நடவடிக்கைகளைத் தொடங்கி மூன்று (3) வருடங்கள் ஆகிய இரண்டில் எக்காலப் பகுதி முன்னதாக நிகழுமோ அந்த நாள் முதல் ஆரம்பமாகும்.

மேற்சொல்லப்பட்ட வரி விலக்களிப்புக் காலப்பகுதியின் பின்னர், கருத்திட்ட நிறுவனத்தின் இலாபம் மற்றும் வருமானம் மீது, மேலும் பதினைந்து (15) வருட காலப்பகுதிக்கு ஆறு சதவீதம் (6%) அல்லது ஹோட்டல்துறை மீது அப்போது அமுலில் இருக்கும் வரி வீதத்தின் ஐம்பது வீதம் (50%) ஆகிய இரண்டில் எது குறைந்ததோ அந்த வீதத்தில் வரி அறிவிடப்பட வேண்டும். ("வரிச்சலுகைக் காலப்பகுதி ").

மேற்சொல்லப்பட்ட வரி விலக்களிப்பு மற்றும் வரிச்சலுகைக் காலப்பகுதி முடிவடைந்த பின்னர் கருத்திட்ட நிறுவனத்தின் இலாபங்கள் மற்றும் வருமானம் மீதான வரி விதிப்பு அப்போது அமுலில் இருக்கும் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேற்சொன்ன நோக்கங்களுக்காக, நிலத்தை வாடகைக்கு விடுபவர் என்ற வகையில் கருத்திட்ட நிறுவனத்தின் அனைத்து வாடகைதாரர்களிடமிருந்து பெறப்பட்ட நிலையான மற்றும்/ அல்லது மாற்றமடையக்கூடியதுமான (வாடகைக்கு இருப்பவரின் வியாபார மட்டத்தின் அடிப்படையில்) வாடகையும், சூதாட்ட செயற்பாடுகள் இயக்குநர்களிடமிருந்து பெறப்பட்ட வாடகையும், சூதாட்டம் அல்லாத செயற்பாடுகளால் பெறப்பட்டதாகக் கருதப்படும்.

கருத்திட்ட நிறுவனம் சூதாட்ட வியாபாரத்தில் ஈடுபடுமாயின், அந்த செயற்பாடுகளிலிருந்து பெறப்படும் இலாபங்களானது, ஏற்புடைய வீதத்தில் கம்பனி வருமான வரிக்கு உட்படுத்தப்படும்.

(ii) பங்கிலாபத்தின் மீதான வரி (Tax on Dividends) -

வரி விலக்களிக்கப்பட்ட இலாபத்திலிருந்து பங்குதாரர்களுக்கு விநியோகிக்கப்படும் பங்கிலாபங்கள் மேற்சொல்லப்பட்ட வரிவிலக்களிப்பு காலப்பகுதிக்கும், அதன் பின்னர் ஒரு வருடத்துக்கும் வருமான வரியிலிருந்து விலக்களிப்பு வழங்கப்படும்.

(iii) நிறுத்தி வைத்தல் வரி (Withholding Tax) -

மூலதனச் செலவினத்துக்காகவும், தொழில்நுட்ப கட்டணங்களுக்காகவும் கருத்திட்ட நிறுவனத்தினால் பெறப்படும் வெளிநாட்டுக் கடன் மீது செலுத்தப்படும் வட்டி, நிறுத்திவைத்தல் வரிக் கழிப்பனவிலிருந்தும், கொடுப்பனவிலிருந்தும் விலக்களிக்கப்படும்.

முகாமைத்துவ கட்டணங்கள், அரசுரிமைப் பணக் கொடுப்பனவுகள் மற்றும் சந்தைப்படுத்தல் கட்டணங்கள் போன்றவற்றின் மீதான நிறுத்திவைத்த வரியிலிருந்து கருத்திட்ட நிறுவனத்திற்கு வரி விலக்களிப்பு வழங்கப்படும். எனினும், இவ்வரி விலக்களிப்பு வழங்கப்பட வேண்டுமாயின் -

(1) அடிப்படை முகாமைத்துவக் கட்டணங்கள்/அரசுரிமைப் பணத்தொகைகள், செயற்பாட்டு வருமானத்திலிருந்து மூன்று (3%) வீதத்தையும்

(2) சந்தைப்படுத்தும் கட்டணங்கள் மொத்த செயற்பாட்டு வருமானத்திலிருந்து ஒன்று தசம் ஐந்து (1.5%) வீதத்தையும்

(3) ஊக்குவிப்பு முகாமைத்துவக் கட்டணங்கள் மொத்த செயற்பாட்டு இலாபத்திலிருந்து பத்து (10%) வீதத்தையும் மிஞ்சலாகாது.

(iv) உழைக்கும் பொழுது செலுத்தும் வரி (உ. பொ. செ.)-

இந்த கருத்திட்ட நிறுவனத்தின் ஆகக்கூடிய வெளிநாட்டு ஊழியர்கள் இருபது (20) பேர்களுக்கு உ. பொ. செ. வரியிலிருந்து (PAYE Tax) விலக்களிப்பு வழங்கப்படும். இந்த வரிச் சலுகை வர்த்தக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து ஐந்து (5) வருடங்களுக்கு ஏற்புடையதாகும். கருத்திட்ட நிறுவனம் தனது நன்முயற்சியினால் படிப்படியாக வெளிநாட்டு ஊழியர்களை உள்நாட்டு ஊழியர்களினால் பதிலீடு செய்தல் வேண்டும்.

(2) 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க் பெறுமதி சேர் வரிச் சட்டம் (VAT)

கருத்திட்டத்தின் அமுல்படுத்தும் காலமான அறுபது (60) மாதங்களுக்கு திருத்தப்பட்டவாறான 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பெறுமதி சேர் வரிச்சட்டத்தின் கீழ் விதிக்கப்படும் வரியிலிருந்து, கருத்திட்டம் தொடர்பாக இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கும், சேவைகளுக்கும் வரி விலக்களிப்பு வழங்கப்படும். இவ்வரி விலக்களிப்பு கருத்திட்ட நிறுவனம்/ஒருங்கிணைக்கப்பட்ட உல்லாச விடுதியிற்கு நேரடியாக விநியோகிக்கப்படும் பொருட்கள், சேவைகள் மட்டுமின்றி, கருத்திட்ட நிறுவனம்/ஒருங்கிணைக்கப்பட்ட உல்லாச விடுதியின் ஒப்பந்தக்காரர் அல்லது உப ஒப்பந்தக்காரர்களுக்கு விநியோகித்த பொருட்கள், சேவைகளுக்கும் ஏற்புடையதாகும்.

இவ்வரிச் சலுகையானது இரண்டாம் கட்டத்தின் கருத்திட்டம் அமுல்படுத்தும் காலப்பகுதியான முப்பத்தாறு (36) மாதங்களுக்கும் உரித்துடையதாகும். இக்கருத்திட்ட நிறுவனமானது தனது வர்த்தக ரீதியான நடவடிக்கைகளை ஆரம்பித்தபின் செய்யும் வழங்கல்களுக்கு, 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பெறுமதி சேர் வரிச்சட்டத்தின் கீழ் வரி செலுத்த வேண்டும். எனினும், வர்த்தக ரீதியான நடவடிக்கைகளை ஆரம்பித்தாலும் கருத்திட்டம் அமுல்படுத்தும் காலப்பகுதியிலும், இரண்டாம் கட்டத்தின் கருத்திட்டம் அமுல்படுத்தும் காலப்பகுதியிலும் தொடர்ந்தும் பெறுமதிசேர் வரியிலிருந்து வரி விலக்களிப்பு வழங்கப்படும்.

(3) 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி விதிப்பனவுச் சட்டம் (PAL)

ஒருங்கிணைக்கப்பட்ட உல்லாச விடுதி கருத்திட்டம் அமுல்படுத்தும் காலப்பகுதியில் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நேரடியாக அல்லது ஒப்பந்தக்காரர்களினூடாக இறக்குமதி செய்யப்படும் எல்லாப் பொருட்கள் மீதான துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரி விதிப்பனவு விலக்களிக்கப்படும்.

இரண்டாம் கட்டத்துக்காக மேலும் முப்பத்தாறு (36) மாதங்களுக்கு கருத்திட்டத்தை அமுல்படுத்தும் காலப்பகுதியில் மேற்கூறப்பட்ட வரிவிலக்களிப்பு வழங்கப்படும்.

*(4) 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிச் சட்டம்*

*கருத்திட்ட நிறுவனத்தின் ஒப்பந்தக்காரருக்கு அல்லது உப ஒப்பந்தக்காரர்களுக்கு திருத்தப்பட்வாறான 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் கீழ், கைத்தொழில் உத்தரவாத நிதிய அறவீடு ( CIGFL) கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்படும்.*

*இரண்டாம் கட்டத்துக்காக மேலும் முப்பதாறு (36) மாதங்களுக்கு கருத்திட்டத்தை அமுல்படுத்தும் காலப்பகுதியில் இந்த வரிச்சலுகை ஒப்பந்தக்காரர்களுக்கும், உப ஒப்பந்தக்காரர்களுக்கும் உரித்துடையதாகும்.*

*(5) கருத்திட்டம் தொடர்பான பொருட்களின் இறக்குமதி மீதான [சுங்கத்தீர்வை (சுங்கக் கட்டளைச் சட்டம் - (235 ஆம் அத்தியாயம்)] ( Customs Duty)*

*கருத்திட்டம் அமுல்படுத்தும் காலப்பகுதியில், கருத்திட்ட நிறுவனத்தின் பெயரில் அல்லது ஒருங்கிணைக்கப்பட்ட உல்லாச விடுதியின் பெயரில் அல்லது கருத்திட்ட நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தக்காரர்/உப ஒப்பந்தக்காரர்கள் பெயரில், இலங்கை முதலீட்டு சபையால் அனுமதிக்கப்பட்ட மூலதனசார் மற்றும் கருத்திட்டம் சார்பான அனைத்துப் பொருட்களும், சுங்கத் தீர்வையிலிருந்து விலக்களிப்பு வழங்கப்படும். எதிர்மறைப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களுக்கு சுங்கத் தீர்வையிலிருந்து விலக்களிப்பு வழங்கப்படமாட்டாது. எனினும், குறிப்பிட்டுள்ள பொருட்கள் தொகையிலும், தரத்திலும் உள்நாட்டில் காணப்படாத போதும் அல்லது ஒருங்கிணைக்கப்பட்ட உல்லாச விடுதியை குறிப்பிட்ட காலத்துக்குள் நிர்மாணிப்பதற்கு போதுமான தரத்திலும், தொகையிலும் கிடைக்கப்பெறாத சந்தர்ப்பத்திலும் எதிர்மறைப்பட்டியலில் உள்ள பொருட்களை சுங்கக் தீர்வையின்றி இறக்குமதி செய்வதற்கு கருத்திற் கொள்ளப்படும். ஆயினும், இந்த சுங்கத் தீர்வையிலிருந்து விலக்களிப்பானது கருத்திட்ட நிறுவனத்தின் ஊழியர்களின் சொந்தப்பாவனைக்காக இறக்குமதி செய்யப்படும் எந்தப்பொருளுக்கும் செல்லுபடியாகாது. மேலும், இந்த உடன்படிக்கையின் கீழ் இறக்குமதி செய்யும் எவையேனும் பொருட்களைப் பரிசோதனை செய்வதற்கு இலங்கை மூலதனச் சபைக்கு அதிகாரம் உண்டு.*

*இந்த சுங்கத்தீர்வை வரிவிலக்களிப்பானது கருத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கருத்திட்டம் அமுல்படுத்தும் காலப்பகுதியான முப்பத்தாறு (36) மாதங்களுக்கும் உரித்துடையதாகும்.*

லக்ஷ்மன் யாபா அபேவர்த்தன, பா. உ.,
முதலீட்டு ஊக்குவிப்புக்கள் அமைச்சர்.

கொழும்பு,
*2013,செத்தெம்பர் 23.*

*10- 221*